(6)

243272

03-6-1993
SRI LANKA

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

# 1993 ஆம ஆண்டின் 6 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

*[1993, பெப்ருவரி மாதம் 18 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1993, பெப்ருவரி மாதம் 18 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : ரூபா 1.00

1993 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்.

[1993, பெப்ருவரி மாதம் 18 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

எ. வ—ஓ. 3/92

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் 55 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— **101 ஆம் அத்தியாயத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

) "நீதிமன்றத்தின் பிசுக்காலிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அல்லது" என்பதிலிருந்து "நீதிமன்றத்திற்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்" என்பது வரையிலான எல்லா சொற்களுக்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலம் :—

"நீதிமன்றத்தின் பிசுக்காலிடம் அல்லது எந்த உள்ளூர் எல்லைகளுக்குள் எதிராளி வதிகின்றாரோ, அந்த உள்ளூர் எல்லைகளுக்குட்பட்ட இதேபோன்ற நியாயாதிக்கம் கொண்டவொரு நீதிமன்றத்தின் பிசுக்கால் ஒருவரிடம் அல்லது எந்த கிராம அலுவலரின் பிரிவுக்குள் எதிராளி வதிகின்றாரோ அந்த கிராம அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும். இவர், இதனை எதிராளிக்கு அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களாயின் ஒவ்வொரு எதிராளிக்கும் முறையாகச் சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பிசுக்கால் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்ட அழைப்பாணையொன்றின் விடயத்தில் அதனைச் சேர்ப்பித்தல் எந்த அலுவலருக்குப் பொறுப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த அலுவலரால் அல்லது கிராம அலுவலர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்ட அழைப்பாணை ஒன்றின் விடயத்தில் அத்தகைய கிராம அலுவலராலும் முறையாக சரிபார்க்கப்பட்டு அதனையும் அதன் நிறைவேற்றுகையையும் நீதிமன்றத்திற்கு திருப்பியனுப்புதல் வேண்டும்.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவு, அப்பிரிவில் "பிசுக்காலுக்கு" என்ற சொல் எங்கெங்கு காணப்படுகின்றதோ அங்கெல்லாம் "விடயத்துக்கேற்ப பிசுக்காலுக்கு அல்லது கிராம அலுவலருக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. **முதன்மைச் சட்டவாக்கத்தின் 60 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2—B 025357—1,545 (92/11)

முதன்மைச் சட்டவாக்கத் தின் 370 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 370 ஆம் பிரிவு, அப்பிரிவில் "பிசுக் கால் அல்லது பிரதிப் பிசுக்கால்" என்னும் சொற்கள் எங்கெங்கு காணப் படுகின்றனவோ அங்கெல்லாம் அவற்றிற்குப் பதிலாக "விடயத்திற்கேற்ப பிசுக்கால் அல்லது கிராம அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத் தின் 371 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 371 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) "அப்பிசுக்காலினது அல்லது பிரதிப் பிசுக்காலினது அறிக்கை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "விடயத்திற்கேற்ப பிசுக்காலினது அல்லது பிரதிப் பிசுக்காலினது அல்லது கிராம அலுவலரினது அறிக்கை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) "ஒவ்வொன்றும் பிசுக்காலினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக. "ஒவ்வொன்றும் விடயத்திற்கேற்ப பிசுக்காலினால் அல்லது பிரதிப் பிசுக்காலினால் அல்லது கிராம அலுவலரினால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத் திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை அதன் 17 இலக்கப் படிவத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வரும் புதிய படிவத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

இல. 17 [பிரிவு 55 அத்துடன் 364]

அழைப்புக் கட்டளையைச் சேர்ப்பிப்பதற்கு
பிசுக்காலுக்கு அல்லது கிராம அலுவலருக்கு
விடுக்கப்படும் பணிப்பாணைப் படிவம்

(தலைப்பு)

........................ நீதிமன்றத்தின்/ ............................... பிரிவின் பிசுக்காலுக்கு/கிராம அலுவலருக்கு.

இணைப்பிரதிகளாக இதனுடன் உமக்கு அனுப்பிவைக்கப்படும் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கிலான அழைப்புக் கட்டளைகளை அவை எவ்வாட்களுக்குச் சேர்ப்பிக்கப்படுமாறு பணிக்கப்பட்டுள்ளதோ அவ் வாட்கள் ஒவ்வொருவருக்கும் உடனடியாக சேர்ப்பித்து அழைப்புக்கட் டளையின் இணைப்பிரதியொன்றையும் அழைப்புக்கட்டளையுடன் வரும் பிரா தின் பிரதிகளுள் (அல்லது உடனுள்ள திட்பமான கூற்றுகளுள் ஒன்றை யும்) அத்தகைய ஆள் ஒவ்வொருவரிடமும் விட்டுவிடுக அல்லது கொடுத்து விடுக. உமது அத்தாட்சிப் பத்திரத்துடன் சான்றாகச் சேர்த்திணைத்து எம்

முறையில் இப்பணிப்பாணையை நிறைவேற்றினீரென்பதை 19......... ஆம் ஆண்டு ............ மாதம் .................. ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்னராக இந்நீதிமன்றத்திற்கு அத்தாட்சிப்படுத்தவும்.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி,

..............................

ஒப்பம்/பதிவாளர்.

19......... ஆம் ஆண்டு ............ மாதம் .............. ஆம் நாள்''.

7. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.